# பொதுக்காலம் 21ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

நமது விசுவாசத்தின் தொடக்கமும் முடிவும் இறைவனே. அந்த இறைவனின் உதவியின்றி இயேசுவே ஆண்டவர் என்று நம்மால் அறிக்கையிட முடியாது. இறைமகன் இயேசுவை நாம் அடையாளம் கண்டு அறிக்கையிடவும் இன்றைய பொதுக்கால் இருபத்தொன்றாம் ஞாயிறு வழிபாட்டுக் கொண்டாட்டம் நம்மை வரவேற்கின்றது.

ஆண்டவர் கொடுக்கும் அதிகாரத்தைப் பற்றிய இன்றைய முதல் வாசகமானது இறைவனின் செய்திகள் மக்களிடம் சென்றடைய இறைவன் குருக்களையும், இறைவாக்கினர்களையும் ஏற்படுத்துகின்றார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவோர் தங்கள் கடமைகளில் தவறும் போது இறைவனால் இறக்கி வைக்கப்படுகின்றனர். மேலும் இறை நம்பிக்கையில் நிலைத்திருப்போரைத் தேர்ந்து கொண்டு அனைத்து அதிகாரத்தையும் கொடுக்கின்றார் என்பதனை இறைவாக்கினர் எசாயா எடுத்துரைக்கின்றார்.

கடவுள் மனித அறிவுக்கு எட்டாதவர். அவருடைய அறிவும், ஞானமும் ஆழமானவை. இவ்வுலகில் உள்ள அனைத்தும் அவரிடமிருந்தே அவராலே அவருக்காகவே படைக்கப்பட்டன என கடவுளின் வியப்பை வியந்து புனித பவுலடியார் இன்றைய இரண்டாம் வாசகத்திலே தெள்ளத் தெளிவாக விளக்குகின்றார்.

இன்றைய நற்செய்திப்பகுதியிலே மக்கள் இயேசுவை யார் இவர்? என்று ஒவ்வொருவருடைய உள்ளமும் கேட்டுப்பார்க்கின்றது. வாழ்வில் குறிக்கோளோடும் இலட்சியத்தோடும் செயல்படுபவர்கள்தான் தாங்கள் யாரென்பதை அறிய முயற்சிப்பர். இயேசுவும் சீடர்களிடம் நான் யார் எனச் சொல்லுகிறீர்கள் என்று கேட்கிறார்.

பேதுரு இயேசுவை மெசியாவாக, வாழும் கடவுளின் மகனாக தனது நம்பிக்கையை அறிக்கையிட்டதனால் கடவுளின் மக்களை வழிநடத்துவதற்கான தலைமைப்பண்பையும், அதிகாரத்தையும், பொறுப்பையும் பெறுகின்றார்.

இன்று நமக்கு இயேசு யாராக இருக்கின்றார்? நோய் நீக்குபவராக, ஆறுதல் தருபவராக, தந்தையாக, நண்பனாக என பல தன்மைகளில் அவரை நாம் அடையாளப்படுத்துவதாக இருப்பினும் இயேசுவின் பெயரால் கூடி வருகின்ற அன்புச் சமூகமாகிய திருச்சபையிலே சீமோன் என்ற சிறு கல் பேதுரு என்ற பாறையாக மாற்றம் பெற்றது போல சிறு கல்லாக இருக்கும் நாமும் நமது வாழ்வால், வார்த்தையால் விசுவாசத்தை அறிக்கையிட்டு ஆழமான இறை நம்பிக்கையில் வளர இறையருள் வேண்டி இத்திருப்பலியிலே இணைவோம்.

**நன்றி: ஆசிரியை திருமதி. லூயிஸ் ரெக்ஸ்லின், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com